(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 252.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2018 ஏப்ரல் 05 வியாழக்கிழமை, மு.ப. 10.30 மணிக்கு

---

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1233/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிமிக்க இடங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி இடங்களில் தற்போது பேணல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற இடங்கள் யாவை;

(iii) இதற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(iv) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளால் அழிக்கப்பட்ட தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிமிக்க இடங்கள் யாவை;

(v) மேற்படி அழிவுகள் பற்றிய மதிப்பீடொன்று செய்யப்பட்டிருப்பின், மதிப்பீட்டுப் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு;

(vi) மேற்படி அழிவுகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(vii) மேற்படி அனைத்தினதும் முழுமையானதோர் அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

1426/ '16

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட முன்மொழிவு இலக்கம் 202 இன் பிரகாரம் அமெரிக்க டொலர் 10 மில்லியனை முதலீடு செய்கின்ற அல்லது 500 புதிய தொழில் வாய்ப்புகளை பிறப்பிக்கின்றதான பின்தங்கிய பிரதேசங்களில் ஆரம்பிக்கப்படுகின்ற தொழில்முயற்சிகளுக்கு பாரிய வரி ஊக்குவிப்புகள் விதந்துரைக்கப்பட்டதன் பிரகாரம், 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட தொழில்முயற்சிகள் பற்றிய பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா;

(ii) மேற்படி முன்மொழிவினை சமர்ப்பிக்கையில் இனங்காணப்பட்ட பின்தங்கிய பிரதேசங்கள் யாவை;

(iii) மேற்சொல்லப்பட்ட பின்தங்கிய பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவதற்காக 2000 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை அரசாங்கத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட வழிமுறைகள் யாவை;

(iv) உட்கட்டமைப்பு வசதிகளை பாரியளவில் அபிவிருத்தி செய்யாமல் பின்தங்கிய பிரதேசங்களுக்கு கைத்தொழில்களை விஸ்தரிக்க இயலாதென்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1740/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை யானை - மனித மோதல்கள் காரணமாக இறந்த யானைகளின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக தனித்தனியாக எவ்வளவு;

(ii) அவ்விதமாக இறந்த யானைகள் இறந்த இடங்கள் யாவை;

(iii) மேற்படி கால எல்லைக்குள் கடுங்காயமுற்ற மற்றும் உயிராபத்து நிலைக்குள்ளான யானைகளின் எண்ணிக்கை யாது;

(iv) தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் இறந்த யானைகளின் எண்ணிக்கையையும் யானை - மனித மோதல்களையும் குறைக்க அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

2043/ '17

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் அமைச்சு அலுவலகங்களின் முகவரிகள் யாவை என்பதையும்;

(ii) அந்த அலுவலகங்களுக்காக வாடகை குத்தகை செலுத்தப்படின் அந்த மாதாந்த வாடகை/ குத்தகை தொகை எவ்வளவென்பதையும்;

(iii) 2015 - 2017 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட்டுள்ள மொத்த வாடகை/ குத்தகைத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேக பதவியணியின் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த பிரத்தியேக பதவியணிக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இராஜாங்க அமைச்சருக்காக ஒதுக்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

2117/ '17

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யுத்தத்தின் காரணமாக 1985 ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்த வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குரிய வெடிவைத்தகல் கிராம மக்களுக்கு, இக்கிராமத்தில் மீண்டும் குடியேறுவதற்கு அனுமதி கிடைத்துள்ளதெனினும், இதற்கான எவ்வித அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தப்படாமையின் காரணமாக தொடர்ந்தும் பல்வேறு பிரதேசங்களில், பல இன்னல்களுக்கு மத்தியில் இவர்கள் வசிக்கின்றார்கள் என்பதையும்;

(ii) மேற்படி கிராமத்தில் வீடுகள், போக்குவரத்து உள்ளிட்ட அடிப்படை வசதிகளின்மையும், காட்டு யானைகளின் அச்சுறுத்தல் காணப்படுகின்றமையாலும் மக்கள் இங்கு மீள்குடியேறுவதற்கு முடியாத நிலை ஏற்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் புனரமைக்கப்பட்ட பாடசாலையும் பாழடைந்துள்ளதென்பதையும்;

(iv) மேற்படி கிராமத்தை அண்டியதாக அமைந்துள்ள கோவில் புளியங்குளம் கிராமத்திலும் அடிப்படை வசதிகளின்மையால் தற்சமயம் 09 குடும்பங்கள் மாத்திரமே வசிப்பதென்பதையும்; இங்குள்ள பாடசாலையும் களஞ்சியமாக பயன்படுத்தப்பட்டுவருகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கிராமங்களின் அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்து மக்களை மீள்குடியேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

2139/ '17

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் க.பொ.த. (உயர் தர) பரீட்சைக்கு உயிரியல் பாடத் துறையில் மாத்தளை, நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களிலிருந்து தோற்றியுள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கையில், பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கையும் சதவீதமும் எவ்வளவென்பதையும்;

(iii) மருத்துவ பீடத்திற்கான தகைமையை பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கையும் சதவீதமும் எவ்வளவென்பதையும்;

(iv) மருத்துவ பீடத்திற்கான தகைமையை பெற்றுள்ள மாணவன் அல்லது மாணவியின் ஆகக்குறைந்த பெறுபேறு, Z பெறுமதி, கல்வி கற்ற பாடசாலை மற்றும் தெரிவுசெய்யப்பட்ட மருத்துவ பீடம் யாதென்பதையும்;

ஒவ்வொரு மாவட்டத்தின்படி தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

2186/ '17

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015.09.18 தொடக்கம் 2017.07.31 வரையான காலப்பகுதியில் இலங்கை கனிய மணல் கம்பனிக்கு ஆட்சேர்க்கப்பட்ட ஆலோசகர்கள், இணைப்பாளர்கள் மற்றும் கருத்திட்ட பணிப்பாளர்களின்;

(i) பெயர்கள்;

(ii) கல்வித் தகைமைகள்;

(iii) தொழில்சார் தகைமைகள்;

(iv) சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்;

(v) பணியாட்டொகுதி வசதிகள்; மற்றும்

(vi) வாகனங்கள் உள்ளிட்ட ஏனைய வசதிகள்;

யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

2229/ '17

கௌரவ அசோக்க பிரியந்த,— மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாண தற்போதைய முதலமைச்சரின் கீழ் உள்ள திணைக்களங்கள், அமைச்சுக்கள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தினதும் பெயர் மற்றும் முகவரி யாது;

(iii) தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் வடமேல் மாகாணசபையின் முதலமைச்சரின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற நிறுவனங்களுக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iv) ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களின் பெயர்கள் மற்றும் ஆட்சேர்க்கப்பட்ட பதவிகளை வெவ்வேறாக குறிப்பிடுவாரா:

(v) அவ்வாறு ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கு மாகாணசபை பின்பற்றியுள்ள முறையியல் யாது;

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

2343/ '17

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்சா,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெற்கு அதிவேக வீதியின் மொத்த நீளம் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி வீதியை நிர்மாணிப்பதற்கான மதிப்பீட்டுச் செலவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வீதியை நிர்மாணிக்கின்றபோது காணி மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) இவர்களுக்கு வழங்குவதற்குள்ள இழப்பீட்டுத் தொகை ஏற்கனவே பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனின், செலுத்தப்பட்டுள்ள மொத்த இழப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டு வரை, தெற்கு அதிவேக வீதியின் மூலமாக அரசாங்கம் ஈட்டிய மொத்த வருமானம் ஆண்டு வாரியாக தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஆண்டுகளில் வீதியின் திருத்த வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த பணத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

2344/ '17

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் களனி பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் சர்வதேச நல்லுறவு விடயப்பரப்பு பற்றிய முதலாவது பட்டம் மற்றும் பட்டப்பின் பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ள மாணவர்கள் இவ்விடயப்பரப்பு பற்றி மூன்று நான்கு ஆண்டுகள் விரிவாக கற்றுள்ளனரென்பதால், இவர்களின் அறிவு மற்றும் ஆற்றலை வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்கு பெற்றுக்கொள்வதற்கான ஏதேனும் முறையியல் தற்போது காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் ஆட்சி ஏற்ற பின்னர் மேற்படி பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்த மாணவர்கள் தங்களுடைய அமைச்சுக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ளார்களாயின், இவர்கள் பற்றிய தகவல்களை பெற்றுக் கொடுப்பாரா என்பதையும்;

(iii) இன்றேல், எதிர்வரும் காலத்தில் மேற்படி பட்டதாரிகளை தங்கள் அமைச்சுக்கு ஆட்சேர்ப்பதற்கு பொருத்தமான முறையியலொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

2402/ '17

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை பயிர்ச்செய்கையின்போது விவசாய இரசாயனப் பொருட்களை கவனயீனமாகப் பாவித்தமை காரணமாக குருநாகல் மாவட்டத்தில் இறந்த ஆட்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவ்விதமாக இறந்த ஆட்கள் பதிவாகிய பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவை;

(iii) விவசாய இரசாயனப் பொருட்களின் பாவனை சம்பந்தமாக மக்களுக்கு விழிப்புணர்வூட்ட அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

2434/ '17

கௌரவ ஜயந்த சமரவீர,— உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தின் வாத்துவ சந்தியிலிருந்து மொரொந்துடுவ சந்தி வரை செல்லும் வாத்துவ மொரொந்துடுவ வீதியை அபிவிருத்தி செய்கையில் காணிகள் மற்றும் சொத்துக்களை இழக்கின்ற குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இவர்களுடைய பெயர், முகவரி, இழக்கின்ற காணியின் அளவு மற்றும் சொத்தின் தன்மை யாவை என்பதையும்;

(iii) காணிகளை இழக்கின்ற குடும்பங்களுக்கு இழப்பீடு செலுத்துவதற்கு அச் சொத்துக்கள் மற்றும் காணிகள் இன்றளவில் விலைமதிப்பீடு செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், இழப்பீடு செலுத்தப்படவுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை, குடும்பங்களின் பெயர், முகவரி மற்றும் செலுத்தப்பட்டவுள்ள இழப்பீட்டுத் தொகை யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

2436/ '17

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த நாட்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வசிக்கும் மாணவ மாணவிகள் க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்கு 04 தடவைகள் தோற்ற முடியுமென பிரதம அமைச்சர் கூற்றொன்றை வெளியிட்டார் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) எனினும் இதுவரை அது சம்பந்தப்பட்ட அறிவுறுத்தல்கள் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு கிடைக்கவில்லையென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த அறிவுறுத்தல்களை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

2461/ '17

கௌரவ இஷாக் ரஹுமான்,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கெக்கிராவ நகரத்தில் அமைந்துள்ள பஸ் தரிப்பு நிலையம் 1977 ஆம் ஆண்டு முதல் இதுவரை முறையாக புதுப்பிக்கப்படாமையினால், மிகவும் சீரழிந்த நிலையில் காணப்படுகின்றது என்பதையும்;

(ii) இதன் காரணமாக பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன், பஸ் தரிப்பு நிலையத்தில் பஸ் வண்டிகளை ஓட்டி நிறுத்துவதில் மிகவும் சிரமம் காணப்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பஸ் தரிப்பு நிலையத்தை எதிர்வரும் காலத்தில் மறுசீரமைப்புச் செய்ய நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) ஆமெனில், அத்திகதி யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— தேசிய பாதுகாப்பு நிதியம் (திருத்தம்),— 1985 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

2.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— பிரதேச சபைகள் (திருத்தம்),— 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 8, 14 மற்றும் 30 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகன (கட்டண) ஒழுங்குவிதிகள் தொடர்பில் போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 சனவரி 15 ஆம் திகதிய 2054/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 143 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகன (கடுகதிப் பாதை) ஒழுங்குவிதிகள் தொடர்பில் போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 சனவரி 15 ஆம் திகதிய 2054/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.3),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 215 அ பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் உடனடியான குற்றப்பணத்தொகை ஒழுங்குவிதிகள் தொடர்பில் போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 சனவரி 15 ஆம் திகதிய 2054/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 4.

நீதித்துறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலம் — குழு ஆய்நிலை.

* 6.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலைய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

பிணையங்கள் பரிவர்த்தனை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வருடாந்த மதுபான உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 திசெம்பர் 11 ஆம் திகதிய 2049/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 1004)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 (4) ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 யூன் 16 ஆம் திகதிய 1867/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையைத் திருத்தி 2017 திசெம்பர் 29 ஆம் திகதிய 2051/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 (4) ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 மார்ச் 16 ஆம் திகதிய 2062/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் திருத்தப்பட்ட 2017 திசெம்பர் 15 ஆம் திகதிய 2049/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— மாகாண சபைகளின் தேர்தல் தொகுதி எல்லைகளை நிர்ணயிப்பதற்கான குழுவின் அறிக்கை,— 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 3அ. (11) ஆம் பிரிவின் பிரகாரம் எல்லை நிர்ணயக் குழுவினால் அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட்டு 2018.03.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுமான அக்குழுவின் அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

* 13.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153 உறுப்புரையின் பிரகாரம், சனாதிபதி அவர்களால் அரசியலமைப்புச் சபையின் விதப்புரைக்கமைய 2015.11.27 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்கள் கணக்காய்வாளர் தலைமையதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாதலாலும்;

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் சம்பளம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம், பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டு அரசாங்க திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்பட வேண்டியுள்ளதாதலாலும்;

சனாதிபதியவர்களினால் 2017.11.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை நிருபத்திற்கான 2017.12.05 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய கணக்காய்வாளர் தலைமையதிபதி, திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்களுக்கு பின்வருமாறு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாதலாலும்:—

(அ) 2015.11.27 ஆம் திகதி முதல் அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 இற்கமைய SL - 4 சம்பள அளவுத்திட்டத்தின் 08 ஆவது படிநிலையில் இருத்தி சம்பளத்தைச் செலுத்தல் மற்றும் பதவிக்குரித்தான ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கும்;

(ஆ) அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 3/2016 இற்கமைய 2016.01.01 ஆம் திகதி முதல் சம்பளத்தை மாற்றியமைக்கும்போது SL - 4 சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் அச்சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் சம்பளத்தை மாற்றியமைத்துச் செலுத்துவதற்கும்; மற்றும்

(இ) அச்சம்பள அளவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் வருடாந்த சம்பள ஏற்றத்தைச் செலுத்துவதற்கும்.

அதற்கேற்ப, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம், கணக்காய்வாளர் தலைமையதிபதி, திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்களுக்கு அரசாங்கத் திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்படுமாறு மேலே குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

* 14.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) உறுப்புரையின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டு 2017 திசெம்பர் 04 ஆம் திகதிய 2048/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— "இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

19.

இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

20.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

21.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

22.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

23.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

24.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

25.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.

ஆலோகா சமூக சேவை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.